**CC.No**. 187/2024

**Date**: 15.05.2026

ம.சா. 1. **இராஜேந்திரன், 73/2026, த/பெ. முத்துக்கிருஷ்னன், காரைக்குடி**
**(சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்துவைக்கப்பட்டது)**

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 14.05.2026**

**<u>குறுக்கு விசாரணை</u>**

**1) நான் என்ன தொழில் செய்கிறேன் என்றால் விவசாயம் செய்கிறேன். வேறு ஏதாவது தொழில் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனக்கு எத்தனை குழந்தைகள் என்றால் ஒரு மகன் மற்றும் மகள் ஆவார். இருவருக்கும் திருமணம் முடிவு பெற்றதா என்றால் முடிவு பெற்றது. என் மகளின் கணவர் பெயர் என்ன என்றால் இராமசந்திரன் ஆகும். இராமசந்திரன் என்ன வேலை செய்கிறார் என்றால் கனடாவில் பணி செய்கிறார். இராமசந்திரன் காரைக்குடியில் ஸ்ரீ பாலாஜி பைனான்ஸ் வைத்துள்ளாரா என்றால் இல்லை. எதிரியை எனக்கு எவ்வாறு தெரியும் என்றால் ரியல் எஸ்டேட் தொடர்பாக தெரியும். எனக்கு சொந்த ஊர் அரிமளம், புதுக்கோட்டை ஆகும். நான் ரியல் எஸ்டேட் செய்வதாக புகாரில் சொல்லியுள்ளேனா என்றால்இல்லை நான் ரியல் எஸ்டேட் தொழில் செய்யவில்லை, எதிரி ரியல் எஸ்டேட் தொழில் செய்கிறார் அதன் மூலமாக எதிரியை தெரியும். எதிரி ரியல் எஸ்டேட் தொழில் செய்கிறார் என்று எனக்கு எவ்வாறு யார் மூலம் தெரியும் என்றால் எனது உறவினர் மூலமாக தெரியும்.**

**2) எனக்கு எதிரியை தெரியாது என்றாலும் என் மருமகன் இராமசந்திரனுக்குதான் எதிரியைதெரியும் என்றாலும் எதிரி இராமசந்திரனிடம் காசோலை கொடுத்துவைத்திருந்தார் என்றாலும், இராமசந்திரன் வெளிநாட்டிற்கு செல்வதால் அவர் எதிரியின் காசோலையை எனதுவசம் கொடுத்துவைத்திருந்தார் என்றாலும் சரியல்ல. என் மருமகனின் அப்பா பெயர் என்னவென்றார் கிருஷ்ணன் என்பதாகும். ம.சா.ஆ.5 ஆவணமான பதில் அறிவிப்பு இராமசந்திரனுக்கு அனுப்புவதாக நினைத்து இராஜேந்திரன் என்று என்னிடம் அனுப்பியுள்ளார் என்றால் அறிவிப்பு எனக்குதான் அனுப்பி உள்ளார். என் சம்பந்தியின் முழுப்பெயர் முத்துக்கிருஷ்ணன் என்றால்**

சரியல்ல. இராமசந்திரனுக்கும் எதிரிக்கு காரைக்குடியில் உள்ள ஜனப்பிரியா சூப்பர் மார்கெட்டில் கொடுக்கல் வாங்கல் பிரச்சனையினால் காவல் விசாரணையின்போது பிரச்சனையை நீதிமன்றத்தில் பார்த்துக்கொள்ளும்படி முத்துக்கிருஷ்ணன் மற்றும் இராமசந்திரன் காவல் நிலையத்தில் எழுத்கொடுத்துள்ளார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

3) எதிரி எனக்கு கொடுத்தாக சொல்லப்படும் வழக்கு காசோலை எப்போது கொடுத்தார் என்றால் 10.05.2021ல் காலையில் என் வீட்டில் வைத்து நிரப்பி கொடுத்தார். காசோலை கொடுக்கும்போது அவரது ஆதார்கார்டு, வங்கி பாஸ்புக் என்னிடம் எதிரி கொடுத்தார். நான் என்ன படித்துள்ளேன் என்றால் 10வது படித்துள்ளேன். எதிரி என்னிடம் எதற்காக யார் மூலமாக பணம் கேட்டார் என்றால் ரியல் எஸ்டேட்டிற்காக 2024 மே முதல் வாரத்தில் பணம் கேட்டார். மேற்படி பணத்தை வங்கி மூலம் கொடுத்தேனா அல்லது ரொக்கமாக கொடுத்தேனா என்றால் 2,00,000 லட்சம் ரொக்கமாக கொடுத்தேன். எவ்வாறு ரூ. 2,00,000/- நான் வைத்திருந்தேன் என்றால் என் நகைகளை அடமானம் வைத்தும், மற்றும் நான் ரொக்கமாக வைத்திருந்தேன். நகை அடமான ரசீதுகளை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாரா என்றால் அதை நான் திருப்பி விட்டேன். பணம் பெறும்போது யார் இருந்தார்கள் என்றால் யாரும் இல்லை, நானும் எதிரியும் மட்டும் இருந்தோம். நான் வட்டி தொழில் செய்கிறேனா என்றால் இல்லை.

4) நான் வட்டி தொழில் செய்யவில்லை என்றால் எதற்காக காசோலை, ஆதார்கார்டு, பேங்க் பாஸ்புக் நகல் பெற்றேன் என்றால் பணம் ரூ. 2,00,000/- எதிரி பெற்றார் அதற்காக பெற்றேன். வங்கி தொடர்பான விபரங்கள் எனக்கு தெரியுமா என்றால் ஓரளவிற்கு தெரியும். எதிரி கொடுத்ததாக கூறப்படும் காசோலை எந்த வங்கி காசோலை என்றால் கார்பரேஷன் வங்கி காசோலை ஆகும். எதிரி 2019ல் இராமசந்திரனிடம் கொடுத்த ஸ்ரீ பாலாஜி பைனான்சிற்காக வழக்கு காசோலை செக்யூரிட்டிக்காக, ஆதார் மற்றும் பாங்க் பாஸ்புக் நகல் கொடுத்து வைத்திருந்தார் என்றாலும், அவர் ஊருக்கு செல்வதற்கு முன்பு அந்த காசோலையை என்னிடம் கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல. பைனான்ஸ் நிறுவத்தில்தான் ஆதார், பாங்க்

பாஸ்புக் நகல் போன்ற ஆவணங்கள் பொதுவாகபெறப்படும் என்றால் அவரிடம் இருந்ததால் நான் பெற்றேன். ம.சா.ஆ.1 வழக்கு காசோலையில் உள்ள கையொப்பம் மட்டும்தான் எதிரியுடையது என்றாலும், நான்தான் மற்ற விபரங்களை பூர்த்தி செய்தேன் என்றாலும் சரியல்ல, அவரே நிரப்பிதான் கொடுத்தார். எதிரிமீது பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 01.04.2020 ல் கார்பரேஷன் வங்கி யூனியன் வங்கியாக மாறிவிட்ட விபரம் தெரியுமா என்றால் வழக்கு காசோலையை வங்கியில் செலுத்தும்போது தெரிந்து கொண்டேன்

5) நான் எதிரிக்கு எந்த ஒரு பணமும் கொடுக்கவில்லைஎ ன்றாலும், எதிரி எனக்கு எந்த ஒரு ஆவணங்களும், காசோலையும் கொடுக்கவில்லை என்றாலும், நான் எதிரி மீது பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. நான் வழக்கறிஞர் அறிவிப்பில் முத்துக்கிருஷ்ணன் என்று குறிப்பிட்ட பின்பு தற்போதைய புகார் மற்றும் பிரமான வாக்குமூலத்தில் காலம்சென்ற முத்துக்கிருஷ்ணன் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். இந்த வழக்குக்கும் எதிரிக்கும் காசோலைக்கும் எந்த ஒரு தொடர்பும் இல்லை என்றாலும், நான் பொய்யாக வழக்குதாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

VALLIMANALAN S A

Digitally signed by VALLIMANALAN S A
Date: 2026.05.15 16:00:27 +0530

நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம், காரைக்குடி.